தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

முகமதியர்களுக்குச் சலுகை

*229 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மைனாரிட்டி முஸ்லிம் மக்களுக்கும், மற்ற சிறுபான்மை இன மக்களுக்குக் கொடுப்பது போல் கலாசார, உத்தியோக தொழில் சம்பந்தமான சலுகைகள் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'மைனாரிட்டி முஸ்லிம் மக்கள்' என்று குறிப்பிட்டிருப்பது, 'சிறுபான்மை மொழிகளில் ஒன்றாகிய உருது பேசும் மக்களைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரிகிறது. இம் மாநிலத்தில் இதர சிறுபான்மை மொழியினருக்கு, 14–3–1961-ம் நாளைய 455-ம் எண் (பப்ளிக்-பார்ட்டிஷன்-துறை) அரசு ஆணையில் தரப்பட்டுள்ள எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் தரப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இதர சிறுபான்மை மொழிபேசும் மக்களுக்குத் தரப்படும் சலுகைகள் இவர்களுக்கும் தரப்படுவதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் மற்ற சிறுபான்மை இன மக்களுக்குத் தரப்படுவதுபோல் இந்த முஸ்லிம் மக்களுக்கும் உத்தியோக, தொழில் சம்பந்தமான சலுகைகள் தரப்பட்ட புள்ளிவிவரம் மேசை மீது வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரிசன நலத் துறையின்கீழ் ஸ்காலர்ஷிப் வழங்கும்போதும் இந்த முஸ்லீம் இனத்தவர்களில் 'லப்பை' 'மாப்பிளா' என்ற பகுதியினர்கள், 'பிற்பட்ட வகுப்பினர் (பாக்வர்டு க்ளாஸஸ்) என்ற அளவில் அந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டு அவர்கள் தகுதிகள் பரிசீலிக்கப் படுகின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, 'லப்பை' என்று சொல்கின்றபோது, தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் என்றுதான் குறிப்பிடுகிற ஒரு மரபு இருந்து வருகிறது. அங் கங்கே இருக்கின்ற அதிகாரிகள் சிலர், 'ராவுத்தர்', 'மரக்காயர்',

கள், கவன ஈர்ப்புகள், கேள்விகள் என்று இப்படி அடிக்கடி கேட்பதன் காரணமாக இந்தச் செய்திகள் பொதுமக்களுக்கு அதிகமாக விளம்பரமாகிக் கொண்டிருக்கின்றன என்பது என்னுடைய எண்ணமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாசேதுங் சுவரொட்டிகளை ஒட்டியதற்காக இதுவரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை பேருக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது? தமிழகத்தில் தலைமறைவாக இருக்கும் நக்ஸல்பாரிகள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பல இடங்களில் கைது செய்யப்பட்டார்கள். சிலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைமறைவாக இருப்பவர்களின் எண்ணிக்கை தெரியுமானால் அவர்கள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தமாதிரி நிலைமைகளைத் தடுப்பதற்காக போலீஸ் இலாகாவிலே தனிப் பிரிவை ஏற்படுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போதே கேரள, ஆந்திர மாநில எல்லைகளில் இப்படிப்பட்ட காவல் துறையினர் தனிப் பிரிவாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுமானால் மேலும் காவல் துறை அந்த அளவுக்குத் தீவிரப்படுத்தப் படும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : மாவோவின் நூல்கள் சட்டப் பூர்வமாக இந்தியாவுக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஒன்று; அது இந்தியாவில் எங்கும் கிடைக்கும். தவறான கருத்துக்களை சரியான கருத்துக் கொண்டே சமாளிக்க வேண்டும். கருத்துக்குக் கருத்து மோதவேண்டும். நமக்கு அனாவசியமான பிராந்தி, பயம் இந்த மாதிரி பீதியை உண்டாக்குச் செய்கிறது. இந்த விஷயத்தைத் திரும்பத் திரும்ப எழுப்பிக் கொண்டிருப்பதில் பயன் எதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : கருத்துக்குக் கருத்து போராட வேண்டியதுதான். அதை மீறி குற்ற ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மட்டுமே அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றி அரசு விளக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதே கருத்தைத்தான் நான் முதலிலே சொன்னேன். இதை அதிகமாகக் கிளறிப் பார்க்க வேண்டியதில்லை. கருத்துக்குக் கருத்து போராடலாம் என்று சொன்னார்கள். இதிலே மாவோவின் புத்தகங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்றாலும் கூட எடுத்து எழுதப்

1970 மார்ச் 6]

படுகின்ற வாசகங்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறுவது போல் கருத்துக்குக் கருத்து பதில் அளிக்கும் வகையில் இல்லை. அந்த வாசகங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன.

"துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகாரம் வளர்கிறது. மே தினத்தன்று படைக்கலம் எந்த நாங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். தோட்டாக்கள் வாயிலாகவே விடுதலையை அடைய முடியும். வாக்குகள் மூலம் பெற இயலாது. மா. சே. துங் பாதையை நாங்கள் பின்பற்றுவோம்".

மேற்கண்ட வாசகங்களின் காரணமாகத்தான் தமிழ்நாடு காவல் துறையினர் நிலைமைகளைத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

Thefts in Nurses Home

* 231 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of frequent thefts in Nurses Home near General Hospital in recent times; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 1969-ம் ஆண்டில் செவிலியர் விடுதியில் மூன்று திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன. 1970-ல் இதுவரை எவ்வித திருட்டும் நடைபெறவில்லை.

(ஆ) 1969-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்று திருட்டு சம்பவத்திலும், போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீசார் மேற்கொண்ட விசாரணையில் போதிய அளவு துப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

திரு. கே. விநாயகம்: அந்த இடத்தில் திருட்டுப் போனதாகச் சொல்லப்படுகின்ற பொருளின் மதிப்பு என்ன? இவ்வளவு திறமையான போலீசாரை வைத்துக் கொண்டிருந்தும் கூட அதைக் கண்டு பிடிக்காமல் போனார்கள் என்று சொல்வது அரசுக்கு இழுக்கு அல்லவா? வெட்கப்பட வேண்டிய நிலைமை அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நோக்கில் குற்றச்சாட்டு கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சிறிய திருட்டைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது வெட்கப்பட வேண்டிய விஷயம் அல்லவா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். முதலிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பெரிய குற்றத்தைச் செய்த ஒரு பெரிய குழுவையே பிடித்தார்கள் என்று சொல்லும்போது திரு. விநாயகம் அவர்கள் எழுந்து 'அவர்கள் பாராட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் அல்லவா? ' என்று கூறியிருந்தால் நாம் கூடப் பாராட்டி இருக்க முடியும். திருட்டுப் போன சாமான்கள் செல்வி மங்கையர்க்கரசி என்கிற மாணவி அறையில் 40 ரூபாய்; செல்வி அம்சவல்லி